| Register Number | | | | | | |
|---|---|---|---|---|---|---|

**Part III**

# செவிலியர் - NURSING

( New Syllabus )

( Tamil Version )

**நேரம் : 3 மணி]** **[ மொத்த மதிப்பெண்கள் : 150**

பகுதி அ — *அனைத்து* வினாக்களுக்கும் விடையளி.

**பகுதி ஆ** — ஏதேனும் *பதினைந்து* வினாக்களுக்கு விடையளி.

**பகுதி இ** — முதல் கேள்விக்கு ( வினா எண். 71 ) கட்டாயமாகவும் மற்ற கேள்விகளில் ஏதேனும் *ஐந்திற்கும்* விடையளி.

**பகுதி ஈ** — ஏதேனும் *நான்கு* கேள்விகளுக்கு சுமார் 200 செற்களில் விடையளி.

## பகுதி – அ

குறிப்பு : அனைத்து வினக்களுக்கும் விடையளி.

I. கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து உங்கள் விடைத்தாளில் எழுதுக: $10 \times 1 = 10$

1. மலேரியா ஒட்டுண்ணிகள் எந்த வகை நுண்ணுயிரைச் சார்ந்தவை ?

அ) புரோட்டோஸோவா ஆ) பாக்டீரியா

இ) வைரஸ் ஈ) பூஞ்சைகள்.

2. அஸ்கார்பிக் அமிலம், .......................... யின் மாறுபெயர்

அ) வைட்டமின் - *D* ஆ) ஃபோலிக் அமிலம்

இ) வைட்டமின் - $B_{12}$ ஈ) வைட்டமின் - *C*.

[ Turn over

3. தொண்டையில் ஏற்படும் ஒருவித தொற்று நோய் ........................ ஆகும்.

அ) குரல்வளை அழற்சி ஆ) பைலோநெப்ரிடிஸ்

இ) தொண்டை சுழற்சி ஈ) ஃபேரிங்கிடிஸ்.

4. DNA வைரஸ் ........................ நோய்க்கு காரணமான நுண்ணுயிர்.

அ) ஹெப்படைட்டிஸ் *A* ஆ) ஹெப்படைட்டிஸ் *B*

இ) ஹெப்படைட்டிஸ் *C* ஈ) ஹெப்படைட்டிஸ் *E*.

5. ஆண்டிரிய பான்டேனல் ........................ மாதத்தில் மூடுகிறது.

அ) 12 - 18 ஆ) 18 - 24

இ) 9 - 12 ஈ) இவைகளில் எதுவும் இல்லை.

6. ஒழுக்கமற்ற குடும்ப உறவால் வரும் நோய் ........................ .

அ) சிபிலிஸ் ஆ) சைனசைட்டிஸ்

இ) ஹெப்படைட்டிஸ் - *B* ஈ) அம்மை.

7. சட்டபூர்வமான கருச்சிதைவு ........................ ஆகும்.

அ) எச்சரிக்கும் கருச்சிதைவு

ஆ) தொற்று வியாதியினால் ஏற்பட்ட கருச்சிதைவு

இ) சட்டபூர்வ கருக்கலைப்பு ( M.T.P. )

ஈ) இவைகளில் எதுவும் இல்லை.

8. கர்ப்ப காலத்தில் மொத்தமாக ........................ கிலோ கிராம் வரை எடை அதிகரிக்கும்.

அ) 6 - 8 ஆ) 10 - 12.

இ) 14 - 16 ஈ) 5 - 6.

9. குழாய் மாத்திரைகள் செய்யப்படுவது ...................... ஆகும்.

அ) மாத்திரைகளினால் ஆ) திரவத்தினால்

இ) ஜெலட்டினால் ஈ) பொடிகளினால்.

10. கல்லீரல் அழற்சியால் பாதிக்கப்படும் பகுதி

அ) கணையம் ஆ) கல்லீரல்

இ) இரைப்பை ஈ) குடல்.

II. கீழ்க்கண்ட கூற்றுகள் சரியா, தவறா என்பதை எழுதுக: 10 × 1 = 10

11. நிமோனியா காற்றினால் பரவும் நோயாகும்.

12. ஃபோலிக் அமிலம், அஸ்கார்பிக் அமிலம், நிக்கோடினிக் அமிலம், ஆகியவை வைட்டமின் பி வகையை சார்ந்தவை.

13. கார்போஹைடிரேட்டின் குறைபாடு நோய் குவாஷியார்க்கர் ஆகும்.

14. வாயில், ஏற்படும் அழற்சிக்கு கிளாஸைட்ஸ் என்று பெயர்.

15. ஓராண்டு நிறைவடையும்போது குழந்தையின் எடை பிறந்த எடையை விட நான்கு மடங்கு ஆகும்.

16. வீட்டைப் பார்வையிடுதல் சுகாதார பணியின் முதுகெலும்பாகும்.

17. கடினமான பிரசவத்திற்கு டிஸ்டோசியா என்று பெயர்.

18. தொப்புள் கொடி நச்சுக்கொடியுடன் 50 செ.மீ. நீளம் வரை இருக்கும்.

19. வைட்டமின் - டி யின் மூல ஆதாரம் சூரிய ஒளியாகும்.

20. பாக்டீரியா நுண்மங்களால் பரப்பப்படும் நோய்கள் காலரா, டைபாய்டு, சீதபேதி.

III. கோடிட்ட இடங்களை நிரப்புக: 20 × 1 = 20

21. …………… என்னும் பாக்டீரியாக்களால் காலரா ஏற்படுகிறது.

22. …………… டைபாய்டு காய்ச்சலை ஏற்படுத்தும்.

23. …………… இளம்பிள்ளை வாதத்தில் இருந்து குழந்தைகளை தடுக்கும் மருந்து.

24. வேலை செய்யத் தேவையான சக்தி அளிக்க …………… தேவையாகும்.

25. சிறு நீரக நோய்களினால் பாதிக்கப்பட்டவருக்கு ……….. உணவு பரிந்துரைக்கப்படும்.

26. …………………. என்பது நாக்கில் ஏற்படும் அழற்சியாகும்.

27. டிப்திரியாவை உண்டாக்கும் நுண்ணுயிரி …………………. ஆகும்.

28. …………………. நெஞ்சு எரிச்சல் என்றும் சொல்லலாம்.

29. ஆஸ்காரியாஸிஸ் …………………. தாக்கத்தால் உண்டாகிறது.

30. காச நோய்க்கான சோதனை…………………. என்றும் அழைக்கப்படுகிறது.

31. S.T.D. என்பது …………………. ஆகும்.

32. A.I.D.S. என்பதன் விரிவாக்கம் …………………. .

33. பாரானாய்ட் அல்லது மிகை மனவெழுச்சி முரண்பாடாகும் நோயால் பாதிக்கப்பட்டவர் …………………. க்கு ஆளாவார்.

34. பிறந்த குழந்தை முதல் முதலில் வெளியேற்றும் மலத்திற்கு ……………………. என்று பெயர்.

35. கருப்பை வாய்ப்பகுதியில் வெள்ளை நிறத்திரவம் ……………….. எனப்படும் செர்விக்ஸ் வெளிவாயை அடைத்துக் கொள்கிறது.

36. மாதவிலக்கு வெளிவருவதும், குழந்தை பிறக்கும் வழிக்கும் ……………….. என்று பெயர்.

37. ……………………. இதில்தான் முதிர்கரு மிதந்து கொண்டிருக்கும்.

38. டிஸ் எனப்படுவது ………………… மற்றும் லெக்ஸியா எனப்படுவது ………………… ஆகும்.

39. ஆங்கில சொல்லான ……………………. என்றால் பிரசவத்தின் போது கவனிப்பவர் என்று பொருள்.

40. புரதச்சத்தின் குறைபாடு …………………. ஆகும்.

IV. பொருத்துக : 10 × 1 = 10

| | | | |
|---|---|---|---|
| 41. | இரணஜன்னி | அ) | குடல் வால் அழற்சி |
| 42. | தைராய்டு சுரப்பி வீக்கம் | ஆ) | இதுவரை பிரசவிக்காத பெண் |
| 43. | மக்பர்னீஸ் பகுதி | இ) | 0 - 3 வாரம் கருவுற்ற கருமுட்டை |
| 44. | தவழும் குழந்தை | ஈ) | அயோடின் |
| 45. | லைட்னிங் | உ) | ஜில்லா பரிஷத் |
| 46. | நல்லிபாரா | ஊ) | இந்த நுண்மங்கள் மண்ணிலும் சாணத்திலும் வாழும். |
| 47. | சினைமுட்டை | எ) | W. பான்கிராப்டி |
| 48. | காச நோய் | ஏ) | 1 - 3 வயது வரை |
| 49. | பைலேரியா | ஐ) | ஆஸிட் பாஸ்ட் பாசிலை ( AFB + *ve* ) |
| 50. | மாவட்ட நிலை | ஒ) | 38 - 40 வாரங்கள். |

## பகுதி - ஆ

V. கீழ்க்கண்டவற்றுள் ஏதேனும் *பதினைந்திற்கு* இரண்டுவரிகளில் சிறு குறிப்பு எழுதுக : 15 × 2 = 30

51. கிருமி நீக்கம் செய்தல்.

52. மலத்திலிருந்து வாய்மூலம் பரவும் தொற்று நோய்கள்.

53. இரும்பு சத்துகளின் பயன்.

54. ஸ்கர்வி நோயின் இரண்டு அறிகுறிகள்.

55. சிறு நீர்ப்பெருக்கிகள்.

56. ஹெர்னியா - வகைகள்.

57. நீரிழிவு நோய் - வகைகள்.

58. வெளிப்புற காது நோய்த் தொற்றில் இரு வகைகள்.

59. வீனிங்.

60. பிளவு உதடு.

61. வீட்டைப் பார்வையிடுதலின் இரண்டு நோக்கம்ங்கள்.

62. ஆரோக்கியம்.

63. பிரசவத்திற்கு பின் வரும் காலம்.

64. மெனோபாஸ்.

65. லாக்கியாவின் நிறங்கள்.

66. ஷோ (Show).

67. கொலஸ்டிரம்.

68. மயாடிக்ஸ்.

69. ஸ்கிஸோபெரினியா - மனச்சிதைவு நோயின் வகைகள்.

70. உணவில் காணப்படும் சத்துபொருட்கள்.

## பகுதி - இ

VI. கீழ்க்கண்டவற்றில் 71 -வது வினாவுக்கு கட்டாயமாகவும், மற்றும் 72 முதல் 77 வரை உள்ள வினாக்களில் ஏதேனும் ஐந்திற்கும் 100 வார்த்தைகளில் பதில் எழுதுக : $6 \times 5 = 30$

71. கர்ப்பகால கவனிப்பின் குறிக்கோள்கள்

*அல்லது*

பிரசவத்தின் 4 நிலைகள்.

72. கிருமி நீக்கம் செய்யப்பட்ட உபகரணங்களை எவ்வாறு கையாள வேண்டும் ?

73. புரதங்களின் வேலைகளும், மூல ஆதாரங்களும்.

74. இரத்த சோகை வகைகள்.

75. ரைல்ஸ் குழாய் வழியாக உணவு ஊட்டலை விவரி.

76. தடுப்பு ஊசி ( E.P.I ) அட்டவணை கூறு.

77. தொழில் சார்ந்த நல சேவைகளில் செவிலியரின் பணி.

## பகுதி - ஈ

VII. ஏதேனும் *நான்கு* தலைப்புகளுக்கு 200 வார்த்தைகளுக்கு குறையாமல் குறிப்பு வரைக :
4 × 10 = 40

78. காசநோய் - உருவாக்கும் பாக்டீரியா
- அறிகுறிகள்
- நோய் கண்டறிதல்
- சிகிச்சை
- செவிலிய மேலாண்மை

79. நீரில் கரையும் வைட்டமின்கள்
- மூல ஆதாரங்கள்
- நன்மைகள்
- வகைகள்
- குறைபாடுகள்.

80. குடல் இறக்கம் (ஹெர்னியா)
- விளக்கம்
- வகைகளும் / பிரிவுகளும்
- மேலாண்மை
- செவிலிய மேலாண்மை
- சிக்கல்கள்.

81. பிரசவத்திற்குப் பின் காலத்திய கவனிப்பு
- விளக்கம்
- சாதாரண பிரசவத்திற்கு பிந்திய காலம்
- சுகாதாரக் கல்வி
- மேலாண்மை / பராமரிப்பு.

82. குழந்தை நல செவிலிய பராமரிப்பின் முக்கியத்துவம்.

83. கல்லீரல் அழற்சி — விளக்கம்
— வகைகள்
— அறிகுறிகள்
— பராமரிப்பு
— செவிலியர் பராமரிப்பு.